Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

God is faithful for the past seventy years.

Vol. 70 ..... என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. சங். 23: 5 செப்டம்பர் 2024 No.9

அர்ப்பணத்தின் ஒரு உடன்படிக்கை

A covenant of consecration

James Gil Christ Lawson

கிறிஸ்மஸ் ஈவான்ஸ் '**வேல்ஸின் ஜான் பன்யன்**' என்று அழைக்கப்பட்டார். அவர் பல வருடங்கள் பிரசங்கித்தபின் தேவனோடுள்ள மிக மிக நெருக்கமான ஐக்கியத்தின் தேவையை வாஞ்சித்தார். ஆழமானதும் முழுமையானதுமான அவர் பெற்ற அனுபவம் அவரது ஆத்துமாவை தெய்வீக அபிஷேகத்தால் எப்படி நிரப்பியது என்பதை அவர் சொந்த வார்த்தைகளால் கூறுகிறார்.

கிறிஸ்துவின் தியாகம் அவரது ஆவியின் பணி இவற்றிற்கெல்லாம் எதிராக எனது இருதயம் குளிர்ந்து விட்டது. பீடத்திலும், தனி ஜெபத்திலும் வேத வாசிப்பிலும்... என் நிலை குளிர்ந்ததாயிருந்தது. எனது இருதயம் கடினமாகவும், ஆவி லௌகீகமாகவுமிருந்தது. ஆயினும் ஜெபிப்பது எனது கடமை என உணர்ந்தேன். நான் ஜெபிக்க ஆரம்பித்த போது, சங்கிலிகள் கழன்று விழுவது போலவும், மலை போன்ற பனிக்கட்டி உருகுவது போலவும் எனக்குள் உணர்ந்தேன். தூய ஆவியானவரின் வாக்குத்தத்தம் என் மனதில் உறுதியை ஏற்படுத்தியது. ஏதோ ஒரு பெரிய கட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட உணர்வு ஏற்பட்டது. ஒரு கொடிய குளிர்கால கல்லறையிலிருந்து எழுப்புவது போல தோன்றியது. இப்போது சத்தமிட்டு ஜெபித்து தேவன் கிருபையாக ஜனத்தை சந்திக்கவும், அவரது இரட்சிப்பின் சந்தோஷத்திற்காவும், இன்னும் அவர் எனது கரத்தில் கொடுக்கப்பட்டிருந்த சபைகளை ஆசீர்வதிக்கும்படியாகவும் ஜெபிக்கத் தூண்டப்பட்டேன். என்னை முழுவதுமாக, என் சரீரம், ஆத்துமா, தாலந்துகள், உழைப்புகள், ஜீவன், நாட்கள், மணித்துளிகள், கவலைகள் அனைத்தையும் கிறிஸ்துவிடம் ஒப்படைத்து விட்டேன். அதற்குப்பின் முதல் ஆராதனையில் குளிர்ந்ததும் வறண்டதுமான ஆவிக்குரிய பனி நிலையிலிருந்து தேவனுடைய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மனோகரமான தேசத்திற்குள் புகுந்தது போல உணர்வு ஏற்பட்டது. ...வீட்டிற்கு வந்த போது முதலாவது என் கவனத்தை கவர்ந்தது, ஆவியானவர் அங்கிலிகியாவிலுள்ள சகோதரரில் கிரியை செய்தாகும். அவர்கள் ஜெப ஆவியால் நிரப்பப்பட்டார்கள். குறிப்பாக தேவன் கிருபையாக நம்மை சந்திக்க வேண்டுமென்று ஆவலோடிருந்த இரு மூப்பர்கள் இவ்வாறு நிரப்பப்பட்டார்கள். அவர்கள் தேவ வசனம் பயனுள்ளதாக எங்களுக்கு அருளப்படவும், பாவிகள் மனந்திரும்பவும் ஜெபித்துக் கொண்டிருந்தவர்கள்.

வேல்ஸ் முழுவதும் மிகப் பெரிய எழுப்புதல் பிரசங்கிக்கிறவர் முதல் மக்கள் வரையிலும் பரவியது. "வல்லமையான செய்திகள், பரலோகத்தின் மூச்சு, மக்களின் அழுகை, துதி ஸ்தோத்திரங்கள், பாவிகள் மனந்திரும்புதல் இவை இவான்ஸ் கூடுகையின் வெளிப்பாடுகள்." இக்கால கட்டத்தில் தான் கிறிஸ்மஸ் இவான்ஸ் இவ்வாறு எழுதுகிறார்:

தேவனோடுள்ள ஒரு கருத்தூன்றிய உடன்படிக்கை :-

♦ இயேசுவே, உண்மையான தேவனே, நித்திய ஜீவனே, என் ஆத்துமாவையும் சரீரத்தையும் உமக்கு ஒப்படைக்கிறேன். என்னை பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் விடுவித்து நித்திய ஜீவனுக்குள் கொண்டு வருவீராக, ஆமென்.

♦ பாவங்களிலிருந்து மீட்பவரே, பாவ உணர்விலிருந்தும், நித்தியத்தின் பயங்கரத்திலிருந்தும் இளைப்பாறுதல் பெற உம்மிடம் வருகிறேன். பகல், சூரியன், பூமி, மரங்கள் இவற்றை சாட்சியாக அழைக்கிறேன், ஆமென்.

♦ உமது வல்லமையின் உறுதியோடு உம்மிடம் வந்து, எனது பணியை உமது கரத்தில் எடுக்கவும், எனக்கு ஒரு விருத்த சேதனமுள்ள இருதயத்தைத் தரவும் வேண்டுகிறேன். ஒரு புதிய ஆவியை என்னில் உருவாக்கி அதன் மூலம் நான் அதன் மகிமையை நாட உதவி செய்யும். நியாயத்தீர்ப்பு நாளில் நான் ஒரு மாய் மாலக்காரனாக உமக்கு முன் நிற்காதபடி காத்துக்கொள்ளும். உமது விலையேறப் பெற்ற இரத்தத்தினால் இதைச் செய்தருளும்.

♦ தேவ குமாரனாகிய இயேசுவே, தமது வேதனையான மரணத்தாலும் சுத்தம் செய்யும் தமது இரத்தத்தாலும் நியாயந்தீர்க்கும் தமது நீதியாலும் விடுதலை செய்யும் தமது மீட்பாலும், எனக்கு வல்லமை தாரும். உமது இரத்தத்தால் உமக்கு சொந்தமானேன். உமது நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

♦ ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே, உமது குரூர மரணத்தின் மூலம் வேண்டுகிறேன். எனது காலம், பெலன், ஈவுகள், தாலந்துகள் யாவற்றையும் முழுமனதோடு அர்ப்பணிக்கிறேன். இவற்றின் மூலம் உலகில் உமது சபை கட்டப்படட்டும். நீரே மனிதருடைய இருதயங்களுக்கும் தாலந்துகளுக்கும் தகுதியானவர், ஆமென்.

♦ எனது பிரதான ஆசாரியரே, உமது வல்லமையால் என்னை ஒரு பயனுள்ள பிரசங்கியாகவும் பரிசுத்தமுள்ள கிறிஸ்தவனாகவும் உறுதிப்படுத்தும். பாவம் என்னில் பிரவேசிக்காதபடியும் அதனால் உமது நீதியின் மேலுள்ள எனது உறுதி குன்றிவிடாதபடியும், எனது தாலந்துகள் குன்றிப்போக நான் மதியீனனாக நடந்து கொள்ளாதபடியும், என் நாட்களில் பயனற்றவனாக எண்ணப்படாத படிக்கும் உமது கிருபையின் கண்கள் பாதுகாவலாயிருப்பதாக. நீரே என் கர்த்தரும் தேவனுமாய் என்றுமிருப்பீராக ஆமென்.

♦ இயேசு கிறிஸ்துவே, இரட்சகரே, அநேகர் இடறி விழுவது போல நானும் விழுந்து விடாமலும், உமது நாமம் தூஷிக்கப்படாமலும், எனது சமாதானம் குலைக்கப்படாமலும், தம் முடைய ஜனங்கள் துக்கப்படாமலும், தமது சத்துருக்கள் மனக்கடினம் கொள்ளாதபடியும் காத்துக் கொள்ளும், ஆமென்.

♦ ஆண்டவரே, எனது ஊழியத்தில் உம்மோடு ஒரு உடன்படிக்கை செய்ய விரும்புகிறேன். என்னை **ஜான் பன்யன், வாவசர், பௌவல், ஹௌவல் ஹாரீஸ், ரோலண்ட்ஸ்** மற்றும் **உவைட் ஃபீல்டு** போன்ற ஊழியர்களைப் போல செழிப்பாக்கு வீராக. என் வளர்ச்சிக்கு தடையாயிருப்பவை மாறட்டும். உம்மால் அங்கீகரிக்கப்பட்டவைகளை எனக்குத் தாரும். 'அன்புக்காக ஏங்கும்' ஒரு இருதயத்தைத் தாரும். உம்மையும் மக்களையும் நான் நேசிக்கட்டும். உமது வார்த்தையைப் பிரசங்கிக்கு முன் மோசேயின் கோல் எகிப்தில் தரையிலும் தண்ணீரிலும் வல்லமை விளங்கச் செய்தது போல வல்லமை விளங்கட்டும். தமது விலையேறப்பெற்ற இரத்தத்தின் வல்லமையால் இயேசுவின் நாமத்தில் செய்வீராக, ஆமென்.

(4-ம் பக்கம் பார்க்க)

முக்கிய அறிவிப்பு

வங்கி வழியாக (Net Banking) **காணிக்கை அனுப்பிய வாசகர்கள் உடனே எங்களுக்கு** Phone **பண்ணுங்கள் அல்லது** SMS or Whatsapp **அனுப்புங்கள்.**

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

"ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல் நான் உங்களைத் தேற்றுவேன்; நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள்" ஏசாயா 66: 13.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2024 செப்டம்பர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், **'வெகுமனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்'** துதிக்கிறேன்.

நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன் எசே. 22:30.

என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக் கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்? எஸ்தர் 8:6

How can I endure to see the evil that shall come unto my people? or how can I endure to see the destruction of my Kindred?

தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு இம்மாதம் எஸ்தரின் சரித்திரத்திலிருந்து ஏழு குறிப்புகளை தியானிப்போம்.

1. இந்தியா

இந்து தேசம் முதல் எத்தியோப்பியா தேசம் வரைக்குமுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளையும் அரசாண்ட அகாஸ்வேருவின் நாட்களிலே சம்பவித்ததாவது : எஸ்தர் 1:1.

Now it came to pass in the days of Ahasueres which reigned, from **India** even unto Ethiopia over an hundred and seven and twenty provinces:

127 நாடுகளை நாம் சிந்திக்கவில்லை. இஸ்ரவேல் ஜனங்களின் சரித்திரத்தில் மூன்று முக்கிய தேசங்கள் இடம்பெறுகிறது: 1. கானான் 2. எகிப்து 3. பாபிலோன்

1. கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ என்றார்.

ஆபிராம் தன் மனைவியாகிய சாராயையும், ... ஆரானிலே சவதரித்த ஜனங்களையும் கூட்டிக்கொண்டு, அவர்கள் கானான் தேசத்துக்குப் புறப்பட்டுப் போய், கானான் தேசத்தில் சேர்ந்தார்கள் ஆதி.12: 1-5.

2. அன்று இரவிலே தேவன் இஸ்ரவேலுக்குத் தரிசனமாகி: நீ எகிப்து தேசத்துக்குப் போகப் பயப்பட வேண்டாம்; அங்கே உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன்.

நான் உன்னுடனே எகிப்துக்கு வருவேன்; நான் உன்னைத் திரும்பவும் வரப்பண்ணுவேன் என்றார் ஆதி.46: 2-4.

3. அவன் ராஜ்யபாரம் பண்ணும் ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதம் பத்தாந்தேதியிலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும் அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து,

சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டி, சிதேக்கியாவின் கண்களை குருடாக்கி, அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குகளைப் போட்டு, அவனைப் பாபிலோனுக்குக் கொண்டு போனார்கள் 2 இராஜா.25: 1-7.

2024 கர்த்தருக்கு முன்பாக உண்மையும் உத்தமுமாய் நடக்கும் ஆண்டு
I have walked before thee in truth and with a perfect heart. Isa.38:3

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

புதிய ஏற்பாடு வரும் போது, "பவுல் அப்போஸ்தலன் பிரயாணம் பண்ணின தேசங்கள்" என்ற படத்தை வேத புஸ்தகத்தின் கடைசி பக்கத்தில் பார்க்கிறீர்கள்; ஆனால் இந்த மாதம் **இந்தியா** பற்றி தியானிப்போம். இந்திய தேசத்தின் பெயர் பரிசுத்த வேதாகமத்தில் இடம் பெறுவது நமக்கு **உற்சாகத்தையும், உத்வேகத்தையும், உத்தரவாதத்தையும் உண்டாக்கட்டும்.**

பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவரான தோமா இந்தியா வந்தார், இரத்த சாட்சியாக மரித்தார் அல்லவா! றிங்கல்தோபே ஐயர், ராக்லான்ட் ஐயர் போன்ற திரளான மிஷனெரிகள் தென் இந்தியா வந்தனர். வில்லியம் கேரி மேற்கு வங்காளம் வந்து சேர்ந்தார். இந்திய மொழிகள் பலவற்றில் பாண்டித்தியம் பெற்றார். ஏதோவொரு விதத்தில் பரிசுத்த வேதாகமத்தை 40 இந்திய மொழிகளில் மொழியாக்கம் செய்வதில் ஈடுபாடு கொண்டிருந்தார். இந்தியர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதுதானே இவர்கள் எல்லாருடைய நோக்கமாயிருந்தது. பவுலைப்போல, **"சகோதரரே, இந்தியர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது"** என்று சொல்வோமா? ரோமர் 10:1.

7 மணி நேர உபவாச ஜெபம் நடத்துவதற்காக நாங்கள் செல்லும் இடங்களில் எல்லாம் "நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு" பாடல் ஒன்றை வழக்கமாக பாடுவோம். அவர்கள் "பாரதம் நம் பாரதம்" என்று எழுதியதை நாங்கள் **இந்தியா நம் இந்தியா** என்று பாடுவோம்.

இந்த ஆசிரியர் கடிதம் எழுதப்பட்டு அச்சிட ஆயத்தமான ஜூலை 30-ம் தியதி அதிகாலை 1.30 மணியளவில், நமது அண்டை மாநிலமான கேரளாவில் வயநாட் (Wayanad) என்ற மலைபாங்கான இடத்தில் நிலச் சரிவு ஏற்பட்டு மூன்று கிராமங்கள் மண்ணில் புதைந்து ஏராளமானவர்கள் இறந்து போனதை நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள்.

இந்த பாடலின் வரிகளை கவனியுங்கள்:

தேசம் அழியுது பார்
இயேசு வரப் போகிறார்
கண்ணீரோடு ஜெபித்திடுவோம்
இதயத்தை ஊற்றிடுவோம்

பாடல்

கன்னியாகுமரி முதல் ஜம்மு காஷ்மீர் வரை
இந்திய தேசம் இயேசுவை அறியட்டுமே
இந்தியா நம் இந்தியா
இயேசுவை அறியட்டுமே

1. பாரில் எங்கும் இயேசுவின்
நாமம் சொல்லுவோம்
பாவம் தீர்க்க வந்தோரை
சாட்சி பகருவோம்
ஆயுசின் நாளெல்லாம்
வாழ்த்தி பாடிடுவோம் – கன்னியாகுமரி

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியூபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

2. உலகவாழ்க்கைகுறுகியதே
சீக்கிரம்கடந்திடும்
உலகமீட்பர்இயேசுவின்
வருகைசமீபமே
தேசம்அழியுதுபார்
இயேசுவரப்போகிறார் –கன்னியாகுமரி

3. கண்ணீரோடுஜெபித்திடுவோம்
இதயத்தைஊற்றிடுவோம்
தியாகத்தோடுசெயல்படுவோம்
உள்ளதைகொடுத்திடுவோம்
இயேசுகிறிஸ்துவுக்காய்
வாழ்வைஅர்ப்பணிப்போம் –கன்னியாகுமரி

2. ஆமான்

அப்பொழுது ஆமான் அகாஸ்வேரு ராஜாவை நோக்கி: உம்முடைய ராஜ்யத்தின் சகல நாடுகளிலுமுள்ள ஜனங்களுக்குள்ளே ஒரு வித ஜனங்கள் சிதறுண்டு பரம்பியிருக்கிறார்கள்; அவர்களுடைய வழக்கங்கள் சகல ஜனங்களுடைய வழக்கங்களுக்கும் விகற்பமாயிருக்கிறது; அவர்கள் ராஜாவின் சட்டங்களைக் கைக்கொள்ளுகிறதில்லை;

ராஜாவுக்கு சம்மதியானால், **அவர்களை (யூதர்களை) அழிக்க வேண்டுமென்று எழுதி அனுப்ப வேண்டியது** என்றான் **எஸ்தர் 3:8,9.**

3. மொர்தெகாய்

நடந்த யாவற்றையும் மொர்தெகாய் அறிந்தபோது, மொர்தெகாய் தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக் கொண்டு, நகரத்தின் நடுவே புறப்பட்டுப் போய், **துயரமுள்ள மகா சத்தத்துடனே அலறிக்கொண்டு,**

ராஜாவின் அரமனை வாசல் முகப்பு மட்டும் வந்தான்; இரட்டுடுத்தினவனாய் ராஜாவின் அரமனை வாசலுக்குள் பிரவேசிக்க ஒருவனுக்கும் உத்தரவில்லை எஸ்தர் 4:1,2.

அப்பொழுது எஸ்தர்: தன் பணிவிடைக்கென்று ராஜாவினால் நியமித்திருந்த அவனுடைய பிரதானிகளில் ஒருவனாகிய ஆத்தாகை அழைப்பித்து: காரியம் என்ன? அதின் முகாந்தரம் என்ன? என்று அறியும்படி, மொர்தெகாயினிடத்தில் விசாரிக்க அவனுக்குக் கட்டளையிட்டாள் எஸ்தர் 4:5.

அப்பொழுது மொர்தெகாய் தனக்குச் சம்பவித்த எல்லாவற்றைப் பற்றியும், **யூதரை அழிக்கும்படி ஆமான்** ராஜாவின் கஜானாவுக்கு எண்ணிக் கொடுப்பேன் என்று சொன்ன பணத்தொகையைப் பற்றியும் அவனுக்கு அறிவித்ததும் அன்றி,

யூதர்களை அழிக்கும்படி சூசானில் பிறந்த கட்டளையின் நகலையும் அவனிடத்தில் கொடுத்து, அதை எஸ்தருக்குக் காண்பித்துத் தெரியப்படுத்தவும், அவள் அகத்தியமாய் ராஜாவினிடத்திற் போய், அவனிடத்தில் தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணவும் மன்றாடவும் வேண்டுமென்று அவளுக்குச் சொல்லச் சொன்னான் எஸ்தர் 4:7,8.

அப்பொழுது எஸ்தர் ஆத்தாகினிடத்தில் மொர்தெகாய்க்குச் சொல்லியனுப்பினது:

யாராவது அழைப்பிக்கப்படாமல், உள் முற்றத்தில் ராஜாவினிடத்தில் பிரவேசித்தால், புருஷரானாலும் ஸ்திரீயானாலும் சரி, அவர்கள் பிழைக்கும்படிக்கு அவர்களுக்கு ராஜா பொற் செங்கோலை நீட்டினாலொழிய மற்ற படி சாக வேண்டும் என்கிற ஒரு தவறாத சட்டமுண்டு, இது ராஜாவின் சகல ஊழியக்காரருக்கும், ராஜாவினுடைய நாடுகளிலுள்ள சகல ஜனங்களுக்கும் தெரியும்; நான் இந்த முப்பது நாளளவும் ராஜாவினிடத்தில் வரவழைப்பிக்கப்படவில்லை என்று சொல்லச் சொன்னாள் எஸ்தர் 4:10,11.

மொர்தெகாய் எஸ்தருக்குத் திரும்பச் சொல்லச் சொன்னது: நீ ராஜாவின் அரமனையிலிருக்கிறதினால், மற்ற யூதர் தப்பக்கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே.

நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்கு சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே யாருக்குத் தெரியும் என்று சொல்லச் சொன்னான் எஸ்தர் 4: 13,14.

4. உபவாசம்

ராஜாவின் உத்தரவும் அவனுடைய கட்டளையும் போய்ச் சேர்ந்த ஒவ்வொரு நாட்டிலும் ஸ்தலத்திலுமுள்ள யூதருக்குள்ளே மகா துக்கமும், **உபவாசமும்**, அழுகையும், புலம்பலும் உண்டாய், அநேகர் இரட்டுடுத்திச் சாம்பலில் கிடந்தார்கள் எஸ்தர் 4:3.

அப்பொழுது எஸ்தர் மொர்தெகாய்க்கு மறுபடியும் சொல்லச் சொன்னது :

நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடி வரச் செய்து, மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக **உபவாசம்** பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் **உபவாசம்** பண்ணுவோம்; இவ்விதமாகச் சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; **நான் செத்தாலும் சாகிறேன்** என்று சொல்லச் சொன்னாள் எஸ்தர் 4:15,16.

5. அகாஸ்வேரு ராஜா

மூன்றாம் நாளிலே எஸ்தர் ராஜ வஸ்திரந்தரித்துக் கொண்டு, ராஜ அரமனையின் உள்முற்றத்தில், ராஜா கொலுவிருக்கும் ஸ்தானத்துக்கு எதிராக வந்து நின்றாள்;

ராஜா ராஜஸ்திரீயாகிய எஸ்தர் முற்றத்தில் நிற்கிறதைக் கண்ட போது, அவளுக்கு அவன் கண்களில் தயை கிடைத்ததினால், ராஜா தன் கையிலிருக்கிற பொற் செங்கோலை எஸ்தரிடத்திற்கு நீட்டினான்;

ராஜா அவளை நோக்கி: எஸ்தர் ராஜாக்கியே, உனக்கு என்ன வேண்டும்? நீ கேட்கிற மன்றாட்டு என்ன? நீ ராஜ்யத்தில் பாகமட்டும் கேட்டாலும், உனக்குக் கொடுக்கப்படும் என்றான் எஸ்தர் 5:1-3.

இயேசுகிறிஸ்து "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்.

என் நாமத்திலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் " யோவான் 14:13,14.

ஜான் நாக்ஸ்
John Knox

இவர் ஸ்காட்லாந்து (Scotland) தேசத்திற்காக முழங்கால்களில் நின்று பல ஆண்டுகள் வேதனை அனுபவித்தார். **'ஆண்டவரே, ஸ்காட்லாந்து தேசத்தை எனக்குக் தாரும், இல்லையேல் நான் மரிக்கட்டும்'** LORD, give me Scotland else I die என்று ஜெபத்தில் கர்ப்ப வேதனைப்பட்டார். தேசத்தின் விடுதலைக்காக அவர் அடைந்த மன வேதனையினால் தூங்க முடியாமல் அநேக இரவுகளை விண்ணப்பம் செய்வதிலேயே கழித்தார்.

ஒரு நாள் இரவில் இவர் தூங்காமல் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்ததை கண்ட இவரது மனைவி அன்போடு அவரைப் பார்த்து, "கொஞ்சம் நேரமாவது இளைப்பாறக் கூடாதா?" என்று கேட்டார். அப்பொழுது அவர்: **"என் தேசம் இன்னமும் இரட்சிக்கப்படவில்லையே"** என்று பதிலளித்தார்.

ஒரே மனிதன் ஜான் நாக்ஸ் மூலம் தேசம் முழுவதும் அசைந்தது. உலகம் கண்டிராத எழுப்புதல் தேசத்தைச் சந்தித்தது. ஜான் நாக்ஸ் தேசத்தைக் கேட்டார், தேவன் கொடுத்தார். இன்று நம் தேசத்தைக் கொடுக்கும்படி **'இந்தியாவை எனக்குத் தாரும், இல்லையேல் நான் சாகிறேன்'** Lord, give me India else I die என்று கேட்கக் கூடிய ஒரு மனிதனைத் தேவன் தேடுகிறார். இந்தியாவின் ஜான் நாக்ஸாக நீங்கள் ஏன் மாறக்கூடாது?

ஆண்டவர் உங்களிடம் பணம், பதவி, கல்வி, அந்தஸ்து, வேத அறிவு அல்லது பேச்சுத்திறன் ஒன்றும் எதிர் பார்க்கவில்லை. ஆண்டவர் உங்களிடம் எதிர்பார்ப்பது பெரிய பரிசுத்தமும் அல்ல. தம்மைத் தவிர யாரும் பரிசுத்தவான் அல்லவென்று அவருக்குத் தெரியும்; ஆனால் தங்கள் அசுத்த நிலைமையை உணர்ந்து, தங்களைத் தாழ்த்தி பரிசுத்த வாழ்க்கை அடைய தங்களைப் பூரணமாக ஒப்புக்கொடுத்து திறப்பிலே நின்று தேசத்திற்காக ஜெபிக்க முன் வருவதையே உங்களிடம் அவர் எதிர் பார்க்கிறார். இவற்றை எல்லாரும் செய்ய முடியும். உங்களால் செய்யக் கூடிய எளிதான காரியத்தை தேவன் எதிர்ப்பார்க்கும் பொழுது நீங்கள் ஏன் மனமுவந்து முன் வரக்கூடாது?

6. எஸ்தர் அழுதாள்

பின்னும் எஸ்தர் ராஜ சமுகத்தில் பேசி, அவன் பாதங்களில் விழுந்து அழுது, ஆகாகியனாகிய ஆமானின் தீவினையையும் அவன் யூதருக்கு விரோதஞ்செய்ய யோசித்த யோசனையையும் பரிகரிக்க அவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினாள் எஸ்தர் 8:3.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்தரின் கதறல்

என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக் கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்? என்றாள் எஸ்தர் 8:6.

ஜான் ஹைடு **John Hyde** 1892-ம் ஆண்டு, தனது 27-வது வயதில் அமெரிக்காவிலுள்ள இல்லினோய்ஸ் பட்டணத்திலுள்ள கார்த்தாகே என்ற ஊரிலிருந்து, ஒரு பிரஸ்பைடீரியன் சபை மிஷனெரியாக பஞ்சாப் மாநிலத்திற்கு வந்தார். 4 வருடங்களாக 1896 வரை அவரது ஊழியத்தில் எந்தவொரு மாற்றமும் நிகழவில்லை.

1899-ம் ஆண்டு ஜான் ஹைடு தேவனது சமுகத்தில் முழு இரவும் முகங்குப்புற விழுந்து ஜெபிக்கத் தொடங்கினார்.

ஜெபிக்கும் ஹைடு (Praying Hyde) என அழைக்கப்பட்ட ஜான் ஹைடு தனக்குள் அதிகரித்துக் கொண்டிருக்கும் அதே பாரத்துடன் ஆண்டவரை நோக்கிக் கதறியவராய், **'ஆண்டவரே, எனக்கு ஆத்துமாக்களைத் தாரும், இல்லையேல் நான் மரிக்கட்டும்'** என்று ஜெபித்தார். இந்த தேவ மனிதன் மூலமாக பஞ்சாப் மாநிலத்தில் சியோல்காட் என்ற இடத்தில் பெரிய எழுப்புதல் ஏற்பட்டது. பஞ்சாப் விசுவாசிகள் இவரை செல்லமாக **'ஒரு போதும் தூங்காத அப்போஸ்தலன்'** என்று அழைத்தார்களாம்.

7. இரட்சிப்பு

அப்பொழுது அகாஸ்வேரு ராஜா ராஜாத்தியாகிய எஸ்தரையும் யூதனாகிய மொர்தெகாயையும் நோக்கி: இதோ, ஆமானின் வீட்டை எஸ்தருக்குக் கொடுத்தேன்; அவன் யூதர் மேல் தன் கையைப் போட எத்தனித்தபடியினால் அவனை மரத்திலே தூக்கிப் போட்டார்கள் என்றான் எஸ்தர் 8: 7.

அப்பொழுது மொர்தெகாய் இளநீலமும் வெள்ளையுமான ராஜ வஸ்திரமும், பெரிய பொன் முடியும், பட்டும் இரத்தாம்பரமும் அணிந்தவனாய் ராஜாவினிடத்திலிருந்து புறப்பட்டான்; **சூசான் நகரம் ஆர்ப்பரித்து மகிழ்ந்தது.**

இவ்விதமாய் யூதருக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், களிப்பும், கனமும் உண்டாயிற்று எஸ்தர் 8:15,16.

புகளும் வேண்டாமே
பெயரும் வேண்டாமே
ஆத்துமாக்களை தாருமே
இந்தியாவை தாருமே

1. உந்தன் வல்லமையை என் மேல் ஊற்றும்
அபிஷேகத்தால் என்னை ஆட்கொள்ளும்

2. கோடி கோடி மக்களுண்டு
இந்த தேசம் இயேசுவை காணட்டும்
தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக
தேவ கிருபை உங்களோடிருப்பதாக

உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008
உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்

நமது சேவை – தேவனுக்கு அன்பின் காணிக்கை

Our Service- A Love offering to God

Lois J. Stucky

"என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு..." மத் 11:29 என்று இயேசு கூறினார். நம்மை வருத்தும் பாரமான நுகங்களாகிய சுயத்துக்கான பணிகளிலிருந்து விடுதலை பெற தேவன் விரும்புகிறார். தேவனை சந்தோஷத்தோடும், தாழ்மையோடும், முழு மனதோடும் சேவிப்பதன் மூலம் அவரோடு இணைந்திருப்பதை அவர் விரும்புகிறார். "என் தேவனே உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்" என்று இயேசு கூற முடிந்தது சங்.40:8. இதே சந்தோஷத்தை அவரோடு நாமும் பகிர்ந்து கொள்ள வேண்டும். "என் சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும் படிக்கும் உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும்..." யோவா. 15:10-11.

நாம் ஆண்டவருக்காகச் செய்யும் சேவை எளிய தாழ்வான பணிகளைச் செய்வதாகத் தோன்றலாம்; ஆனால் இருதயம் பாடிக் கீர்த்தனம் பண்ணி கர்த்தருடைய அன்பை வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கும். அதே வேளையில் மனமும் கரங்களும் சேவையில் ஜாக்கிரதையுடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கும். யாரேனும் அரைகுறை மனதோடும் கவனமின்றியும் பணி செய்தால் அவர்கள் இருதயத்தை நாம் அறிந்து கொள்ள முடியும். "ஒருவன் எதை நேசிக்கிறான் என்பது அவன் முழு மனதையும் எதில் செலுத்துகிறானோ அதில் தான்" என்று ஒரு பெரியவர் கூறியிருக்கிறார். அன்பு அதினிடத்திலுள்ள நன்மையானவற்றைக் கொடுக்கும்.

உலக மனிதர் வாழ்வாதாரங்களைத் தேடவும் சந்தோஷமாக வாழவும் சொகுசான ஆடம்பர வாழ்க்கை நிகழ்த்தவும் பாடுபடுகிறார்கள். நேரத்தைப் பார்த்துக் கொண்டே பணி செய்கிறார்கள். புகழ், அதிகாரம் ஆகிய வற்றைப் பெற கடினமாக முன்னேறுகிறார்கள். ஆனால் அருமை இரட்சகரை சந்தோஷப்படுத்தவும் அவரது திட்டங்களை நிறைவேற்று வதும் நமது நோக்கமாகவும் சந்தோஷமாகவுமிருந்தால் வரும் சந்தோஷம் வித்தியாசமானது.

அன்பு நமது உள்ளங்களில் ஆட்சி செய்யும் போது **'எனக்கு எவ்வளவு கிடைக்கும்'** என்பதல்ல, **'நான் எவ்வளவு கொடுக்க முடியும்?'** என்ற சிந்தை ஏற்படும். 'உற்சாகமாகக் கொடுக்கிறவனிடத்தல் தேவன் பிரியமாயிருக்கிறார்.' நமது பணம் உடைமைகள் மட்டுமல்ல நம்மையே அர்ப்பணிப்போம்

தேவனுடைய வழிகள் நம் முடைய வழிகளுக்கு மேலானவை. அவர் ஒருவரை அவர்கள் விரும்புகிற இடத்திலிருந்து அழைத்து தமது திட்டங்களை நிறைவேற்ற அழைக்கலாம். ஆனால் விரும்பி கீழ்ப்படிந்து, தேவன் அழைக்கும் பணிக்கு உற்சாகத்துடன் செல்பவர்களுக்குத் தமது கிருபையை அளிக்கிறார்.

ராஜாவாகிய மணவாளன் இயேசு சீக்கிரமாக வரப் போகிறார். அவர் தரமான சேவையை எதிர்ப் பார்க்கிறார். நம்மில் ராஜாவுக்குத் தகுதியான சேவை காணப்படுகிறதா?

யோவான்.10:17-18-ல் கூறிய படி இயேசுவின் ஆவியோடு இணைந்து "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியால் ..." என்று நாம் சொல்ல முடியுமா? சுயநலமற்ற சேவையால் நாம் நமது ஜீவனைக் கொடுப் போம். முதலாவது தேவனுக்காகவும் பின்பு மனிதருக்காகவும் ஜீவனை அர்பணிப்போம். ஆண்டவரை நமது உதடுகளால் மட்டுமல்ல, கீழ்ப்படிய விருப்பமுள்ள இருதயத்தோடும் உத்தம கைகளின் கிரியைகளோடும் அவரைத் துதிப்போம்.

(1-ம் பக்க தொடர்ச்சி)

♦ என்னை ஆராய்ந்து பார்த்து நியாயத்தீர்ப்பின் பாதையில் நடத்து வீராக. நான் உமது பார்வையில் காணப்படுவது போல என்னைப் பார்க்கட்டும். நித்தியத்தின் ஒளி என் மேல் விடியும் போது எனது கண்கள் அழிவின்மையின் பிரகாசத்தினை பார்க்க வேண்டும். என்னை உமது இரட்சிக்கும் இரத்தத்தால் கழுவியருளும், ஆமென்.

♦ எனது அனுதின தேவைகளுக்காக உம்மை நான் நம்பி எனது விண்ணப்பங்களை ஏறெடுக்க வல்லமை தாரும். உமக்கும் எனக்குமிடையிலுள்ள உடன்படிக்கை சாதாரணமாயிருக்க வேண்டாம். அழிந்து போகும் காகத்தை போஷிப்பது போலவும் காய்ந்து நெருப்புக்கு இரையாகும் காட்டுப்புஷ்பத்தை உடுத்துவிப்பது போலவுமல்ல, என்னை உம்முடைய குடும்ப அங்கத்தினராக மற்றும் தகுதியற்ற ஒரு சகோதரனாக நினைத்தருளும், ஆமென்.

♦ உமது பரிசுத்த ஸ்தலத்தின் பணியிலிருந்து பாவத்தின் மூலம் ஏலியின் பிள்ளைகள் அகற்றப்பட்டது போல எந்தப் பாவமும் என்னில் ஆட்கொள்ள ஒட்டாதிருப். ஆசீர்வதிக்கப்பட்டவரே, எனது பயனுள்ள நாட்களைப் பெருகப் பண்ணும். உமது இரக்கங்களால் நான் பயனுள்ளவனாக வாழட்டும், ஆமென்.

♦ இரட்சகரே, பிதாவின் முன் என் வேண்டுதல்களை வைக்கிறேன். உமது புத்தகத்தில் அழியாத பேனாவினால் எழுதுவீராக. நான் இவ்வுலகில் புத்தகத்தில் அழிவுள்ள பேனாவால், கரங்களால் எழுதுகிறேன். உமது ஆழமான கிருபையாலும், வல்லமையாலும், உருக்கத்தாலும் உமது நீதி ஸ்தலத்தில் எனது எளிய விண்ணப்பத்தை எழுது வீராக. நான் ஒரு புறம் எழுத நீர் அதற்கு ஆமென் சொல்வீராக, ஆமென்.

"உன்னதத்திலிருந்து வரும் வல்லமை"

"Power from on High"

John Green Field, Moravian Evangelist

"கர்த்தராகிய தேவனே, பரிசுத்த ஆவியானவரே,
இந்த ஆசீர்வதிக்கப்பட்ட வேளையிலே,
பெந்தெகொஸ்தே நாளைப் போலவே,
தமது அனைத்து வல்லமையோடும் இறங்கும்.

நாங்கள் ஒருமனதோடே,
நியமிக்கப்பட்ட இடத்திலே,
எங்கள் ஆண்டவரது வாக்குக்காகக்
காத்திருப்போம்,
நீரே அனைத்து கிருபைகளின்
ஆவியானவர்.

வாலிபரும், வயோதிபரும் பரத்தின்
ஞானத்தால் தூண்டப்பட்டு
அக்கினி நாவுகளையும் இதயங்களையும்
பெற்று
உம்மை நோக்கி ஜெபிக்கவும் துதிக்கவும்
நேசிக்கவும் செய்யட்டும்"

மேற்கூறிய பாடலைப் பாடியவர் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த, மொரேவியன் பாடகர் ஜேம்ஸ் மான்ட்காமரி *(1771-1854)*. இதனை சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் இவ்வாறு பாடினார். இன்னொரு பெந்தெகொஸ்தேப் பெறுவதற்கான ஜெபம் அவரது ஆவிக்குரிய தந்தையாரால் 13 ஆகஸ்டு 1727 ல் ஜெர்மனியிலுள்ள ஹெர்ம் ஹட்டில் தூண்டப்பட்டது. நாம் நமது நாட்களில் மான்ட்காமரியின் உத்தம ஜெபத்தோடு இன்னொரு பெந்தெகொஸ்துக்காக சேர்ந்து கொள்வோம். D.L.மூடி தன் ஆவிக்குரிய பிறந்த இடமாகிய பாஸ்டனில் தூய ஆவியானவரைக் குறித்து இவ்வாறு பேசினார்:

பெந்தெகொஸ்தே நாளில் அவர் எவ்வாறு இறங்கினார்! அவர் இன்னும் வர வேண்டும், இடம் அசைய வேண்டும் என்று ஜெபிப்பது மாம்சத்துக்குரியதல்ல. ஏனெனின் பெந்தெகொஸ்தே நாள் ஒரு மாதிரியின் நாள். பெந்தெகொஸ்தே ஒரு அற்புதம் எனவும் அது இனி மறுபடி வருவதில்லை எனவும் சபை ஒரு தவறான கருத்தை ஏற்படுத்தியுள்ளது. நானும் அப்படியே சிந்தித்தேன். ஆனால் நாம் பெந்தெகொஸ்தே ஒரு மாதிரி தினமாக எண்ணி ஜெபித்தால் இன்றே, இங்கேயே அந்த எழுப்புதலைப் பெற முடியும்.

ஒரு மொரேவியன் வரலாற்றாசிரியர் இவ்வாறு எழுதுகிறார்:- "கர்த்தர் சொல்லுகிறார்: இவ்வாறு நடைபெறும் ... நான் ஊற்றுவேன்" இது தான் யோவேல் மூலமாக அவரது வாக்குத்தத்தம்.

அதன் முதல் நிறைவேறுதல் தான் பெந்தெகொஸ்தே நாளில் நடந்தேறியது. இது ஒன்றேதான் வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல் என்று புதிய ஏற்பாட்டில் கூறப்படவில்லை. நேர்மாறாக அப்போஸ்தலர் நடபடிகளில் அனேக ஆவியின் மாரிகளைக் குறித்து படிக்கிறோம். எடுத்துக் காட்டாக சமாரியாவில் *(8:14-17)* எபேசுவில் *(19:1-7)* மற்றும் புறஜாதிகள் மத்தியில் *(10:44-46)* படிக்கிறோம்.

சபை வரலாறும் பரிசுத்த ஆவியின் விசேஷித்த அருள் மாரிகளைக் குறித்து ஏராளமாகக் குறிப்பிட்டுள்ளது. 13 ஆகஸ்டு 1727 நிச்சயமாக ஒரு தூய ஆவியின் பொழிவின் நாளாயிருந்தது. நாங்கள் தேவனுடைய கரத்தையும், அவரது அற்புதங்களையும் கண்டோம். நாங்களெல்லாரும் நமது பிதாக்களின் மேகங்களின் கீழ் அவர்களது ஆவியால் ஞானஸ்நானப்படுத்தப்பட்டோம். தூய ஆவியானவர் எங்கள் மீது இறங்கிய படியால் மகாப் பெரிய அற்புதங்களும் அடையாளங்களும் எங்கள் மத்தியில் நடைபெற்றன. அன்றிலிருந்து அவருடைய சர்வ வல்லமை விளங்காத நாட்களே எங்களிடம் காணப்படவில்லை. தேவ வசனத்தின் மீது ஏற்பட்ட மிகப் பெரிய பசியால் ஒவ்வொரு நாளும் முறையே 5.00 காலை, 7.30 காலை மற்றும் 9 மாலை ஆகிய வேளைகளில் ஆராதனைகள் நடத்த வேண்டியதாயிற்று. ஒவ்வொருவரும் தங்களை தூய ஆவியானவரின் ஆளுகைக்கு ஒப்புவித்து விட்டனர். சுய அன்பு, சுய சித்தம், மற்றும் அனைத்து கீழ்ப்படியாமையும் மறைந்து கிருபையின் பிரவாகம் அனைவரையும் தெய்வீக அன்பின் கடலுக்குள் இழுத்துச் சென்றது.

கிறிஸ்துவின் அருகாமை

1727 ஆகஸ்ட் 13-ம் நாள் புதன் முற்பகல் விசேஷித்த ஐக்கிய ஆராதனை பெர்தெல்ஸ்டார்ஃப்-ல் நடந்தது. அன்று நடந்தவற்றை அங்கு வந்த யாராலும் விவரிக்க முடியாது. அவர்கள் தேவனுடைய வீட்டை விட்டு மத்தியானம் வெளியே சென்ற போது "அவர்கள் இந்த உலகத்திற்குரியவர்களா அல்லது ஏற்கனவே பரலோகம் சென்று விட்டனரா என அறியாமல் சென்றனர்". பல ஆண்டுகளுக்குப் பின் கௌன்ட் ஸின்ஸென்டார்ஃப் ஒரு பிரிட்டிஷ் கூடுகையினரிடம் இவ்வாறு கூறினார்:-

"...இருபத்தேழு ஆண்டுகளுக்கு முன்னால் ஹெர்ன்ஹட் சபையின் பெர்தெல்ஸ்டோர்ஃப் ஆலயத்தில் தங்களைக் குறித்த அதிருப்தியுடன் கூடியிருந்தனர். அவர்கள் மற்றவர்களை குற்றப்படுத்துவதை நிறுத்தியிருந்தனர். ஏனெனில் தேவ பார்வையில் தாங்கள் ஒவ்வொருவரும் குறைபட்டிருப்பதை அவர்கள் உணர்ந்தனர். அவர்களது ஐக்கியம் இரட்சகரின் ஒப்பற்ற பார்வைக்கு முன்பாக இருந்தது.

"காயங்கள் நிறைந்த தலையே
வேதனையும் நிந்தையும் நிறைந்தவரே"

துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவிக்கிறவருமாகிய அவரைப் பார்த்த போது அவர்களது இருதயங்கள் அவர்தான் தங்கள் கண்ணீரைத் துடைத்து சந்தோஷப்படுத்தி துக்கங்களை களிப்பாக மாற்றுகிற ஆசாரியர் என்பதை கண்டுக் கொண்டன. இந்த உறுதியான நம்பிக்கை ஒரே வினாடியில் அவர்களை சந்தோஷமான மக்களாக மாற்றியது. ஆகையால் பரலோகக் கிருபையினால் ஆயிரக்கணக்கானோரை வழி நடத்தவும் கூடியதாயிற்று."

மதிப்புக்குரிய அத்தியட்சர் எட்வர்ட் ரோண்ட்தாலர் கூறுவதைக் கேளுங்கள்: "ஸின்ஸென்டார்ஃப் ஆழமானதும் மிகத் தெளிவாதுமான இந்த அற்புத நிகழ்வை விவரிக்கும் போது 'அது கிறிஸ்துவின் அருகாமையின் ஒரு உணர்வாக இருந்தது' ஒரே வினாடி அது அளிக்கப்பட்டது. அங்கிருந்த அனைவர் மேலும் அது பிரசன்னமாகியது. அது ஒருமனப்பட்டதாயிருந்ததால், இருபது மைலுக்கப்பால் வேலை செய்தவர்களும், கூடுகை நடப்பதை அறியாமலிருந்தும் ஒரே வேளையில் ஒரே விதமான ஆசீர்வாதத்தை ஆழமாக உணர்ந்தனர்.

இந்த அங்கத்தினரெல்லாம் சாதாரணமானவர்களாயிருந்தும் பின் நாட்களில் ஊழியர்களாக, மிஷனெறிகளாக, பாதிரிமாராக மற்றும் அத்தியட்சர்களாக எழும்பினர். சாதாரண மக்களாகிய அவர்கள் கிறிஸ்துவை அனுபவித்த போது எல்லாரும் கிறிஸ்துவின் ஊழியக்காரராயினர். இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும் படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்" 1 பேதுரு 2:5.

அது ஒரு இளந்திருச்சபை தான், ஆனால் ஆசீர்வாதத்தைப் பெற்றது. ஸின்ஸென்டார்ஃப் என்ற அந்த தலைவர் வெறும் இருபத்தேழு வயதை மட்டுமே உடையவராயிருந்தார்.

புதுப்பிக்கப்பட்ட சபையின் ஆரம்ப உழைப்புகளை வரிசையாகப் பார்க்கும் போது இத்தனை துணிந்த விசுவாசத்துடன் செயல்பட்ட வாலிபர்களை காணலாம்.

நவீன பெந்தெகொஸ்து

நிச்சயமாகவே மொரேவியன் திருச்சபையின் சரித்திரம், மிகப் பெரிய அந்த அமெரிக்க சுவிசேஷகனுடைய உபதேசத்தை (தூய ஆவியானவரை) தேவையானதும் கூடுமானதுமென உறுதி செய்கிறது.

மொரேவியன் சகோதரருடைய ஆவிக்குரிய அனுபவங்கள் இருநூற்றாண்டுகளுக்கு முன்பு பெந்தெகொஸ்து வல்லமை போலும் அப்போஸ்தலர் கால விளைவுகள் போலுமிருந்தது.

எருசலேமிலும் ஹெர்ம் ஹட்டிலும் உள்ள மொத்த விசுவாசிகளின் எண்ணிக்கை முந்நூறுக்கும் குறைவாயிருந்தது. இரண்டு சபை மக்களும் மனித வாக்கில் கூறினால்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உலக தாக்கம், ஞானம், வல்லமை, பொருளாதாரம் அற்றவர்கள். அவர்களது சத்துருக்கள் அவர்களை 'கல்வியறிவற்றவர்கள் மற்றும் அறியாமையுள்ளவர்கள்' என்றும் அழைத்தனர். அவர்களது மிகப் பெரிய நண்பன் இப்படி அவர்களை விவரிக்கிறார்: "எப்படியெனில் சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள், மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார், உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தில் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்." *(1 கொரி.1:26-29)*

இந்த இரு பெலவீன சபையார் மீதும் தேவன் தமது தூய ஆவியை ஊற்றி அவர்களை உன்னதத்தின் வல்லமையால் தரிப்பித்தார். ஒரு காலத்தில் அவர்கள் மெல்லியவர்களாகவும் பயம் நிறைந்தவர்களாகவும் இருந்து இப்போது பற்றியெரியும் சுவிசேஷகர்களாக மாற்றப்பட்டவர்கள். இயற்கைக்கு மேலான அறிவும் வல்லமையும் அவர்களைப் பற்றிக் கொண்டது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாயும் ஞானமும் எந்த எதிரியாலும் எதிர் பேசவும் தடுக்கவும் கூடாத தாயிருந்தது. எதிர்ப்புகளும் பாடுகளும் எருசலேம் சபையாரை எங்கும் சிதறிப் போகச் செய்தாலும் அவர்களது சாட்சியை அமைதிப்படுத்த முடியவில்லை. **"சிதறிப் போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்."** *(அப்.8:4)*

இதே அனுபவத்தையே மொரேவிய சகோதரர்களிலும் காண்கிறோம். கடின உழைப்பும் இரத்த சாட்சி மரணமும் மூலமாக மிகப்பெரிய சீர்திருத்தவாதியான ஜான் ஹஸ் என்ற 'நமது சகோதரர்' பாடுகள் வழியாக பல நூற்றாண்டுகளைக் கடந்து வந்துள்ளனர். அவர்களில் அநேகர், தங்கள் சாட்சிகளை, தங்கள் இரத்தத்தின் மூலம் முத்திரை பதித்துள்ளனர். சிறையிருப்பு, சித்திரவதை, நாடு கடத்தல் போன்ற வற்றால் அவர்கள் வீடுகளையும் பெற்றோரையும் விட்டு விட்டு அகதிகளாக ஜெர்மனிக்கு தப்பியோடினர். அங்கு **கௌன்ட் ஸின்ஸென்டார்ஃப்** என்ற கிறிஸ்தவ பெரியார் அவர்களுக்கு இல்லத்தை சாக்ஸனியிலுள்ள எஸ்டேட்டில் வழங்கினார். அவர்கள் அந்த புதிய இல்லத்திற்கு **'ஹெர்ன்ஹட்'** ஆண்டவரின் பாதுகாவல் என்று பெயரிட்டனர். பின்பு தூய ஆவியானவரின் அபிஷேகத்திற்குப் பின்பு உலகம் எங்கிலும் சுவிசேஷகர்களாகவும் மிஷனெறிகளாகவும் சென்றனர். அவர்களது புதிய தலைவரான **கௌன்ட் ஸின்ஸென்டார்ஃப்** அவர்களைக் குறித்து இப்படியாக உண்மையாகப் பாடக் கூடியதாயிருந்தது:

> எவ்விடத்திலும் உரத்த சத்தமாய் ஆரவாரித்து,
> நரகத்தின் வாசல்கள் அந்த ஆரவாரத்தால் அசைய,
> உமது அபிஷேகம் நிறைந்த சாட்சியின் மேகம்,
> உமது மிகப் பெரிய மீட்பை அறிவிக்கும்

முதல் முப்பது ஆண்டுகளுக்குப் பின் அவர்கள் சுவிசேஷத்தை அதாவது ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் கிடைக்கும் இரட்சிப்பை ஏறக்குறைய ஐரோப்பாவின் எல்லா தேசங்களிலும் மட்டுமல்ல, அமெரிக்கா, வட தென் ஆசியா மற்றும் ஆப்ரிக்காவில் வாழும் புறஜாதியினருக்கும் எடுத்துச் சென்றனர்.

இப்படித்தான் *1727* ஆகஸ்டு பதிமூன்றாம் நாள் நடைபெற்றது. இந்த நாளை கௌன்ட் ஸின்ஸென்டார்ஃப் **"சபையார் மேல் தூய ஆவியானவரின் பொழிதலின் நாள்"**, **'பெந்தெகொஸ்தே'** எனக் குறிப்பிட்டார். மேலும் "இரட்சகர் இது வரை நாங்கள் அறியாததும் அனுபவியாததுமான ஆவியை எங்கள் மீது வரும்படி அனுமதித்தார்" என்றும் இதனை விவரித்தார்.

இதுவரை நாங்கள் தலைவர்களும் உதவியாளர்களுமாயிருந்தோம். இப்போது தூய ஆவியானவரே எல்லாவற்றையும், எல்லாரையும் தமது முழு கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொண்டார்.

எனவே அவர் இயேசுவிடம் இவ்வாறு ஜெபித்தார்:

> "கர்த்தாவே, எங்கள் பிரதான ஆசாரியரும் இரட்சகருமானவரே,
> அக்கினியையும் ஆவியின் உற்சாகத்தையும் ஊற்றுவீராக
> நாங்கள் மன்றாடிக் கொண்டிருக்கும் போது
> எங்கள் எல்லா ஆசாரியக் குழுவின் மீதும்
> மக்கள் வேண்டிக் கொண்டிருக்கும் போதும்
> கந்தவர்க்கங்களைத் தந்து எங்கள் கரங்களைப் பிடித்துக் கொள்ளும்"

☆ ☆ ☆

தூய ஆவியானவரின் மகிமையான ஊழியம்

The glorious ministry of the Holy spirit

Rich Carmicheal

"ஆனபடியினாலே நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போல, கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். ஆகையால் நீங்கள் மதியற்றவர்களாயிராமல் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள். துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து...." *(எபேசி.5:15-18).*

விசுவாசிகளின் வாழ்க்கையில் இந்தக் கடைசி நாட்களில் முக்கியமான தொன்று ஆவியினால் நிரப்பப்படும் அனுபவமாகும். இந்தக் கடைசி கொடிய காலங்களில் இவ்வனுபவம் நாம் கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்படுவதற்கு மட்டுமல்ல, மற்றவர்களையும் ஆயத்தப்படுத்த வேண்டும். பிசாசானவன் தனக்கு இனிக் கொஞ்சக் காலம் தான் உண்டென்று அறிந்து, அநேகரை ஏமாற்றவும், அழிக்கவும் இயன்ற மட்டும் தடுப்புகளை ஏற்படுத்துகிறான். நம்மைச் சுற்றியிருக்கும் மக்களுக்கு இன்றைய தேவை ஆவியால் நிரப்பப்பட்ட விசுவாசிகளின் சாட்சியும் ஊழியமுமே. அதற்குரிய ஆதாரங்கள் இப்போது நம்மிடமில்லை. ஆனால் தூய ஆவியானவரின் நிறைவால் நாம் ஆவிக்குரிய வாழ்வாலும் கனிகளாலும் நிரம்பி வழியலாம். ஆவியானவரின் மகத்தான ஊழியத்தின் சில சத்தியங்களை இங்கு சிந்திப்போம்.

1. தூய ஆவியானவர் நம்மை வல்லமையால் நிரப்புகிறார்

அப்.1:8-ல் இயேசு தமது சீஷரிடம் அவர்கள் தூய ஆவியால் நிரப்பப்படும் போது எருசலேமிலிருந்து துவங்கி உலகத்தின் கடைசி பரியந்தம் சாட்சியாயிருப்பீர்களெனக் கூறினார். அதன்படி அவர்கள் காத்திருந்து, ஜெபித்து பெந்தெகொஸ்தே நாளில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியைப் பெற்றனர். ஆவியானவர் அவர்களை வல்லமைப்படுத்தி, தைரியப்படுத்தி, உற்சாகப்படுத்தியதால் அவர்கள் தைரியமாகவும் பிரயோஜனமாகவும் இயேசு சொன்னது போல சுவிசேஷத்தைப் பரவச் செய்தார்கள்.

இயேசு ஏற்கெனவே இந்த வல்லமையைப் பெற்றிருந்தார். எனவே, "கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார், தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார், இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொருங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார்" *(லூக்.4:18)* என்று கூறியிருக்கிறார். மேலும் தேவ ஆவியால் அவர் பிசாசுகளைத் துரத்தியதாகக் கூறியிருக்கிறார். *(மத்.12:28)* அப்போஸ்தலனாகிய பேதுரு இவ்வாறு கூறுகிறார்: "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவரோடே கூட இருந்தபடியினாலே, அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்." *அப்.10: 38*

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று இந்த வல்லமை நமக்குத் தேவை. இந்த மேலான வல்லமையால் நாம் சுவிசேஷத்தை தைரியமாகவும் பயன்படும் விதத்திலும் அறிவித்து, நன்மை செய்யவும், இருதயம் நொருங்குண்டவர்களுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் நன்மை செய்து ஊழியம் செய்ய முடியும். மீகா 3:8 ன் படி கர்த்தருடைய ஆவி அருளின பலத்தினாலும் நியாயத்தினாலும் பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருப்போம்.

2. தூய ஆவியானவர் சத்தியத்தின் ஆவியானவராயிருந்து எல்லா சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார். (யோவா.16:13)

ஏமாற்றுதல் பெருகும் இந்தக் கடைசி நாட்களில், சத்தியமும் ஆவிக்குரிய பகுத்தறிவும் அதிகமாகத் தேவைப்படுகின்றது. அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறு சுட்டிக் காண்பிக்கிறார்: "ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனசாட்சியிலே சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்"(1தீமோ.4:1) இயேசு இவ்வாறு எச்சரிக்கிறார்: "ஏனெனில் கள்ளக் கிறிஸ்துக் களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்".(மத்.24:24) சத்தியத்தின் ஆவியானவர் நம்மை சத்தியத்தில் நன்கு நிலைநிறுத்த வேண்டும். தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை, சத்தியம் என்னும் இடைக் கச்சை உட்பட நாம் தரிக்க வேண்டும். அப்போதுதான் சாத்தானுடைய எல்லா தந்திரங்களுக்கும் எதிர்த்து நிற்க முடியும் (எபே.6:11) தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் நாம் எடுக்க வேண்டும். (வச.17)

தூய ஆவியானவரை நமது ஆசிரியராகக் கொள்ள வேண்டும். (யோவா.14:26; 1யோவா. 2:27) ஆவிக்குரிய சத்தியங்களும் உண்மைகளும் சாதாரண மனிதரால் அறிந்து கொள்ளப்பட முடியாது. தூய ஆவியால் ஒளியூட்டப்பட்டவர்கள் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். "நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களிலும் ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும் படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்."(1 கொரி. 2:10-12) ஆவியானவர் மூலம் வெளிப்படுத்தப்படும் சத்தியங்களுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம். இதனால் நாம் கர்த்தரையும் அவரது வார்த்தையையும் அவர் நமக்காக வைத்திருக்கும் யாவற்றையும் அறிந்து கொள்வோம்.

3. தூய ஆவியானவர் ஜீவன், சந்தோஷம், சமாதானம், நம்பிக்கை எல்லாவற்றிற்கும் ஆதாரமானவர்.

ஆவியானவர் நம்மில் பிரசன்னமாயிருப்பதைக் குறித்த ஒரு அழகிய காட்சியை யோவான் 7:37-39 வசனங்களில் படிக்கிறோம். "பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன், வேத வாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார்."இது போல ஏசாயா 32 15-ல் அவர் இப்படி தீர்க்கதரிசனம் கூறுகிறார்:"உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும், அப்பொழுது வனாந்தரம் செழிப்பான வயல் வெளியாகும். செழிப்பான வயல் வெளி காடாக எண்ணப்படும்."(ஏசா.32:15) நாம் இத்தகைய வழிந்தோடுவதும், பயனுள்ளதுமான வாழ்வை விரும்புகிறோமா?

இந்தக் கடினமான நாட்களில் சந்தோஷம், சமாதானம் என்பவைகளின் தேவையைக் குறித்து என்ன சொல்லுவது?

ஆவியின் கனியில் சந்தோஷமும், சமாதானமும் அடங்கும். (கலா.5:22) தேவனுடைய ராஜ்யம் நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமாயிருக்கிறது. (ரோமர் 14:17) அதிக துன்பங்கள் மத்தியிலும் தூய ஆவியின் சந்தோஷத்தால் நிரப்பப்பட முடியும் (1 தெச.1:6) "பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும் படிக்கு நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லா விதசந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக." (ரோமர் 15:13)

4. தூய ஆவியானவர் நம்மைத் தேவனுடைய அன்பால் நிரப்புகிறார்.

அநேகருடைய அன்பு தணிந்து போகிற இந்நாட்களில் (மத்.24:12) தூய ஆவியானவர் தேவ அன்பை நம்மில் ஊற்றிக்கொண்டே இருக்க வேண்டும். (ரோமர்5:5) அதன் மூலம் அன்பின் கனியை வாழ்வில் பெற வேண்டும். (கலா.5:22) தூய ஆவியின் ஒத்தாசையால் மட்டுமே அன்பு கூர முடியும் கர்த்தருடைய சேவையும் செய்ய இயலும்.கொலோ 1:8 ன்படி ஆவிக்குள்ளான அன்பை நாம் வெளிப்படுத்த வேண்டும்.

5. தூய ஆவியானவர் தூய்மையின் ஆவியானவர். (ரோமர் 1:4)

இந்தக் கடைசி நாட்களில் பாவமும் ஒழுங்கின்மையும் பெருகி வரும் போது (மத்.24:12; 2தீமோ.3:1-4) நாம் ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலின் கிரியைக்காக நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். (2தெச.2:13) நாம் அவரில் நடப்பதால் மாம்ச இச்சைகளை நிறைவேற்றக்கூடாது. (கலா.5:16) ஆனால் ரோமர் 8:13-ன் படி ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழிக்க வேண்டும். அவர் நம்மை புதுப்பிக்கிறார்.(தீத்து 3:5) நமது உள்ளான மனிதனை பலப்படுத்துகிறார் (எபேசி. 3:16) அவருடைய மகிமையான ஊழியத்தால் கர்த்தருடைய மகிமையான சாயலுக்கு மறுரூபமடைவோம். (2கொரி. 3:18)

6. தூய ஆவியானவர் நமது பலவீனங்கள் மற்றும் ஜெபத்தில் உதவி செய்கிறார்.

"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால் ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெரு மூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்."(ரோமர் 8:26) நாமும் ஜெபிக்கக் கூடும். "எந்தச் சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும், சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்."(எபேசி.6:18) "நீங்களோ, பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்திக் கொண்டு பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக் கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள்."யூதா.21,22.

7. தூய ஆவியானவர் நமது வாழ்க்கையில் வழி நடத்தி, ஊழியத்திற்காக நம்மைத் தரிப்பித்து வலுப்படுத்துகிறார்.

ஆவியானவரைச் சார்ந்து அவரால் நடத்தப்படுகிறவர்கள் மட்டுமே அவரது பிள்ளைகள். (ரோமர்8:14) ஆவியில் வாழ்வதும் ஆவியில் நடப்பதும் ஆசீர்வாதமானவை. (கலா.5:25) ஆவியினால் வரமும் அழைப்பும் பெற்று பணி செய்வது மேலானது. (1கொரி. 12:11; அப்.13:2, 20:28) ஆவியினால் புதுப்பிக்கப்பட்டு ஊழியம் செய்வது பெரிய சிலாக்கியம் (ரோமர் 7:6) ஆவியினால் வலுப்படுத்தப்பட்டு சேவிப்பதும் மேலானது (1கொரி. 2:4; 1 தெச.1:5; 1பேதுரு 1:12).

★ ★ ★

கிறிஸ்துவின் மேல் நோக்கமாயிருத்தல்

Focusing on Christ

Rich Carmichael

நமது விசேஷித்த நோக்கை ஆண்டவராகிய இயேசுவின் மேலும் அவரால் நாம் பெறும் ஜீவன், நம்பிக்கை ஆகியவற்றின் மேலும் வைப்பதைக் குறித்து உங்களோடு பகிர்ந்து கொள்வது தேவன் எனக்கு அருளிய சிறந்த வாய்ப்பாகும். தேவன் கடந்த காலங்களிலும் இந்நாட்களிலும் வரும் தூதன் பத்திரிகை செய்திகள் மூலம் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கூடாது என்று எண்ணக்கூடிய சூழ்நிலைகளிலும் தேவன் அதை சாத்தியமாக்குவார் என்ற நம்பிக்கை இந்த மாத செய்திகள் மூலம் உங்களில் ஏற்படட்டும். இது போன்ற குழப்பமும் கலக்கமுமான சோதனை காலங்களிலும் கூட அநேகருக்கு இரட்சிப்பையும் எழுப்புதலையும் கொண்டு வர நமது தேவனை நாம் நோக்கிப் பார்க்கலாம் என்பது எத்தனை அருமையானது! அவர் மனதுருக்கமும் வல்லமையுமுள்ள வர். நமது விசுவாசம், சார்பு, ஜெபங்கள் மற்றும் சேவைகள் மூலம் கிரியை செய்ய உத்தமர். எனவே தொடர்ந்து விசுவாசத்திலும், ஜெபத்திலும், சேவையிலும், நிலைத்திருங்கள். நம்மால் கூடாத வைகளெல்லாம் தேவனால் கூடும்.

குழப்பமான வேளைகளில் அவரை நம்புங்கள்

குழப்பமான நேரங்களில் தடைகளை அல்ல இயேசுவையே நோக்க வேண்டும். தடைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது அவை நம்மைத் திகைக்கவும், குழப்பவும் செய்து, அவை ஏன் அனுமதிக்கப்பட்டன அல்லது எப்படி அவற்றை மேற்கொள்ளலாம் என்று புரிந்து கொள்ள முடியாமல் செய்து விடுகின்றன. பேதுரு தன் கண்களை ஆண்டவருக்கு நேராக ஏறெடுத்த போது அவன் தண்ணீர் மேல் நடக்க முடிந்தது. ஆனால் அலைகளைப் பார்த்த போது அவன் நீரில் மூழ்க ஆரம்பித்தான். எனவே நமது சோதனைகள் அதிகமாகி அவை நம்மை பயமுறுத்தும் போது இயேசுவை இன்னும் அதிகமாக நோக்கிப் பார்ப்போமாக.

இவ்வுலகின் புயல்களின் மத்தியில் கிறிஸ்து நமக்குப் பாதுகாவலாயிருந்து நம்மை நடத்துவதற்காக நாம் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். அவரில் நமது பெலன், ஆதரவு, சமாதானம், ஆறுதல், ஆரோக்கியம், நம்பிக்கை, ஜீவன், சந்தோஷம், ஊக்கம் மற்றும் வெற்றி ஆகியவை காணப்படுகின்றன. அவர் சொல்லும் விலையேறப் பெற்ற வார்த்தைகளை கவனியுங்கள்:

"வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிற வர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" மத்.11:28

"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன்; என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் .... உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக." யோவா. 14:27

"...உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்" யோவா.16: 33

"...நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அதினாலே நாம் தைரியங்கொண்டு; கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே." எபி.13:5-6.

எல்லாம் கிறிஸ்துவுக்கே

கிறிஸ்து தம்முடைய எல்லாவற்றையும், மேலும் தம்மையே நமக்காகக் கொடுத்து விட்டார். எனவே நாமும் நம்மையும் நமக்குரியவைகளையும் அவருக்கு அளிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். பவுல் அப்போஸ்தலனைப்போல "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன் நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்போது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" கலா.2:20 என்று சொல்வோம்.

"நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக் கொண்டு... நம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்." தீத்து 2:13-14.

"ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்" 1தெச. 4:16-17.

மன்றாட்டு ஜெபம்

மற்ற ஜெபங்களை விட வேறுப்பட்டது. அது சிறு பிள்ளை ஒன்று தகப்பனிடத்தில் தன் தேவைகளைக் கேட்கும் ஜெபத்தைப் போன்றது அல்ல. மன்றாட்டு ஜெபம் தேவனிடம் இரந்து வேண்டுவதாகும். அது தேவ இரக்கத்தை மக்கள் பெறும்படியாக திறப்பின் வாசலில் நிற்கிற ஜெபம். அது மக்களின் அவல நிலைமைக் குறித்து மிகுந்த இரக்கம், கரிசனை மற்றும் பாரத்தோடு ஜெபிப்பது. அது தேவனுக்கு முன்பாக இதயத்தை தண்ணீரைப் போல ஊற்றி விடுவது. அது உணர்ச்சிகளையும் துக்கத்தையும் வெளிப் படுத்தும் கண்ணீரோடும் பெருமூச் சோடும் வேண்டுவது.

☆ ☆ ☆

வேதாகமம் ஒரு அரும்பெரும் கிரவியம்!
அது தேவனின் உண்மை!
பரிசுத்த ஆவியானவரின சக்தம்!
பக்தர்களின் கீதம்!
தேனிலும் மதுரம்!

உங்கள் வாழ்வு உடைந்து விட்டது என்று நீங்கள் எண்ணும் போது அதை மிக நேர்த்தியாக தேவன் செப்பனிட்டு கொண்டிருக்கிறார் என்பதை மறந்து விடாதிருங்கள்.

சிந்தனைக்கு

இன்று மிக முக்கியமான காரியங்கள் இருக்கின்றன. அதனால் **ஜெப**த்தை சற்றுக் குறைத்துக் கொள்ளலாம் என்ற சிந்தனை வரலாம் இவையெல்லாம் சாத்தானுடைய ஆலோசனைகள்.

கிறிஸ்து தம்முடைய எல்லாவற்றையும், மேலும் தம்மையே நமக்காகக் கொடுத்து விட்டார்.

குழப்பமான நேரங்களில் தடைகளை அல்ல **இயேசு**வையே நோக்க வேண்டும்.

ஆண்டவர் உங்களிடம் பணம், பதவி, கல்வி, அந்தஸ்து, வேத அறிவு அல்லது பேச்சுத்திறன் ஒன்றும் எதிர்பார்க்கவில்லை.தங்கள் அசுத்த நிலைமையை உணர்ந்து, தங்களைத் தாழ்த்தி பரிசுத்த வாழ்க்கை அடைய தங்களைப் பூரணமாக ஒப்புக்கொடுத்து திறப்பிலே நின்று தேசத்திற்காக **ஜெபிக்க** முன் வருவதையே உங்களிடம் அவர் எதிர்பார்க்கிறார்.

உங்களால் செய்யக் கூடிய எளிதான காரியத்தை **தேவன்** எதிர்ப்பார்க்கும் பொழுது நீங்கள் ஏன் மனமுவந்து முன் வரக்கூடாது?

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason